

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.12.2024) தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு "இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா தெரு" என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு "இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா" என்றும் பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்காக, நாகூர் ஹனிபாவின் மகன்கள் நாசர் மற்றும் நவ்சாத், மகள் திருமதி ஜரினா பேகம், மருமகன் சாகுல் அமீது மற்றும் அவர்களது குடும்பத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. முகம்மது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந. கௌதமன், நாகப்பட்டினம் நகரமன்றத் தலைவர் இரா.மாரிமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.12.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை – மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி மற்றும் சாந்தோம் பேராலயத்தின் பங்குத்தந்தை வின்சென்ட் சின்னதுரை ஆகியோர் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் சந்தித்து, சென்னை பாலன் இல்லத்தில் 26.12.2024 அன்று நடைபெறவுள்ள விடுதலை போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு. வீரபாண்டியன், நா. பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.







